**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No.37/2019**

**PW6**

| | | |
|---|---|---|
| Name | : | அண்ணாமலை |
| Father's Name | : | கோவிந்தசாமி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25.07.2025.

A1,2, 4 to 17 present.

**முதல் விசாரணை**

நான் அஸ்வநாதசுரனை கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது . சுமார் 10 வருடத்திற்கு முன் நானும், எங்கள் ஊர் தலைவர் தேவராஜூம் திருவண்ணாமலை தாலுகா காவல் நிலையத்திற்கு பிரச்சினைக்காக சென்றபோது போலிசார் என்னிடம் பேப்பரில் கையொப்பம் பெற்றார் . நாங்கள் எங்கள் பிரச்சனையை முடித்துவிட்டு வந்துவிட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. 2. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ளது என்னுடைய கையொப்பம் அல்ல . வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் கடந்த 02.05.2013 ம் தேதி நானும் எங்கள் ஊர் தலைவர் தேவராஜூம் திருவண்ணாமலை - செங்கம் சாலையில் இருசக்கர வாகனத்தில் அத்தியந்தல் ஏரிக்கரையில் காலை 9 மணிக்கு வந்தபோது , திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய காவல் ஆய்வாளர் அன்று காலை 1 மணிக்கு அந்த இடத்தில் டாரஸ் லாரி எதிரிகளால் எரித்து வேறுறொரு நபர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் நானும், அண்ணாமலையிலும் கையொப்பம் இட்டுவிட்டு , அந்த இடத்தில் இருந்து உடைந்த நிலையில் இருந்த பீர் பாட்டில்கள் 3, லாரியின் இரும்பு கைப்பிடி பாகம் 1, கண்ணாடி சிவப்பு நிற டார்ச் லைட் , ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் , அதில் நானும் தேவராஜூம் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு , தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.